வாதி தரப்பு சாட்சி-1 (பரமசிவம்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1, 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

1. நான் திருச்சோபுரம் பூதங்கட்டியில் வசிக்கிறேன். எனக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி பானு இரண்டாவது மனைவி ஜெயா. நான் O.S.No. 277/2018 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது மனைவி பானு பெயரில் O.S.No.279/2018 என்ற வழக்கு உள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட இரண்டு வழக்குகளின் விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2. O.S.No.279/2018 வழக்கின் விவரங்கள் எனக்கு தெரிந்தது போலவே எனது மனைவிக்கும் வழக்கின் விவரங்கள் தெரியும் என்றால் தெரியும். எனது மனைவியை அழைத்தால் சாட்சி சொல்ல வருவார் என்றால் சரிதான். மேற்படி இரண்டு வழக்குகளின் பிரதிவாதிகளை எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் அரசு பணியில் இருந்து அலுவலக உதவியாளராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான்.

3. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது மனைவி ஜெயா படிக்கவில்லை. பானுக்கு படிக்க தெரியும். நான் திருச்சோபுரம் பூதங்கட்டியில் எத்தனை ஆண்டுகளாக வசிக்கிறேன் என்றால் 35 ஆண்டுகள். இந்த வழக்கில் 1 முதல் 4 பிரதிவாதிகளை தெரியும். அவர்கள் தற்போது அவர்கள் உயிருடன் உள்ளனர். 5ம் பிரதிவாதி மாயவன் வழக்கு நடக்கும்போது இறந்து விட்டார். அவருடைய வாரிசான (மனைவி) வெள்ளையம்மை, (மகன்) அருள்மணி, பவுள்ராஜ் கிடையாது பால்ராஜ் (மகன்). ஆனந்தவள்ளி (மகள்).

4. O.S.No. 277/2018 வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் தடை உத்தரவு கேட்டுள்ளேன். வழக்கு சொத்தில் அத்துமீறி பிரதிவாதிகள் பிரவேசிக்க கூடாது என்று தடை உத்தரவு கேட்டுள்ளேன்.

5. O.S.No.279/2018 வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். சிவகொழுந்து மாசிலாமணி மாயவன் ஆகியோர் சகோதரர்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்து எவ்வளவு ஆண்டுகளாக அனுபவிக்கிறோம் என்றால் 30 ஆண்டுகள் இருக்கும். வழக்கு சொத்து யாரிடம் இருந்து வாங்கினேன் என்றால் சிவகொழுந்து மாசிலாமணி மாயவன். யார் பெயரில் சொத்து வாங்கினேன் என்றால் என் பெயரில்தான் கிரையம் வாங்கினேன். சிவகொழுந்து மாசிலாமணி மாயவன் ஆகியோர் தற்போது உயிருடன் உள்ளார்களா என்றால் இல்லை.

6. வழக்கு சொத்தை முறையாக பதிவு செய்து கிரையம் வாங்கினேனா என்றால் இல்லை. சொத்து அரசு புறம் போக்கு ஆகும். தனிநபர் பட்டா சொத்து இல்லை என்றால் சரிதான். குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.